11.08.2025

Spl.M.O.P. No. 86 / 2020

**ம.சா.1 – பழனிச்சாமி**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

நான் 2020 ஜுன் மாதம் ஓய்வு பெற்றேன். ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் பெற்றுவிட்டேன். மாத ஓய்வூதியமாக ரூபாய் 30 ஆயிரம் பெற்று வருகிறேன். என்னுடைய ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் எந்தவித தடங்கலுமின்றி முழுமையாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். ஓய்வு பெற்ற பிறகு துப்பாக்கித் தொழிற்சாலை குடியிருப்பில் குடியிருக்கக் கூடாது என்று சொன்னால், ஆறு மாதம் வரை குடியிருக்கலாம். என் மனைவி அந்த துப்பாக்கித் தொழிற்சாலை குடியிருப்பில் தான் நான் பிரிந்த பிறகும் குடியிருந்து வந்தார்கள் என்றால், ஜனவரி 2021 வரை குடியிருந்தார். அதன்பிறகு, என் மனைவியும், மகனும், மகளும் தற்போது எங்கு குடியிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால், அந்த பகுதி தெரியும், முகவரி தெரியாது. தற்போது எங்கு குடியிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியாது. அண்ணா நகரில் வசித்து வருகிறார் என்று தெரியும். 2020 ஜுன் மாதம் வரை நான் எதிர்மனுதாரர் மற்றும் குழந்தைகளுக்கு பணம் கொடுத்து வந்தேன். அவ்வாறு பணம் கொடுத்தேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. காசோலை மூலமாகதான் கொடுத்தேன். எதிர்மனுதாரர் திருவரம்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததின் அடிப்படையில்தான் நான் ../

பணம் செலுத்திவந்தேன் என்றால் சரியல்ல. 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் என்னுடைய குழந்தைகளின் ஜாதகம் எனக்கு சரியில்லை என்று சொல்லிவிட்டு, நானாக வீட்டைவிட்டு வெளியேறி விட்டேன் என்றாலும், அதற்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பொய்யான காரணத்தை சொல்லிவிட்டு சுமதி என்பவருடன் இருந்த தகாத உறவின் காரணமாக அவருடன் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்தவொரு விவாகரத்து வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த சீராய்வு மனு விசாரணையின்போது, எங்கள் இருவரையும் சமரச மையத்தில் ஆஜராகி சேர்ந்துவாழச் சொல்லி உத்தரவிட்டார்கள் என்றால் சரியல்ல. சமரச மையத்திற்கு நான் நான்கு முறை சென்றேன், எதிர்மனுதாரர்தான் வரவில்லை. நான் சமரச மையத்திற்கு ஆஜராகாத காரணத்தினால்தான் அந்த வழக்கு மீண்டும் நீதிமன்றத்திற்கே விசாரணைக்கு வந்தது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சேர்ந்துவாழ்வதற்கு பலமுறை முயற்சி செய்தார் என்றாலும், நான்தான் சேர்ந்து வாழாமல் தவிர்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஜுவனாம்ச வழக்கில் எதிர்மனுதாரருக்கு ரூபாய் பத்தாயிரமும் என் மகனுக்கு அவர் மேஜராகும்வரை ரூபாய் எட்டாயிரமும் கொடுக்கச் சொல்லி உத்தரவானது என்றால் சரிதான். அந்த உத்தரவுப்படி தற்போது வரை ஏழு லட்சம் ரூபாய் நான் ஜுவனாம்ச பாக்கி வைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஜுவனாம்சம் கொடுக்காத .../

காரணத்தினால் சட்டப்படி விவாகரத்து கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் தனித்து தன்னிச்சையாக சென்றதற்கு எதிர்மனுதாரர் எந்தவிதத்திலும் காரணமில்லை என்ற காரணத்தினால், நான் கோரியுள்ள விவாகரத்து பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விவாகரத்து பெறவேண்டும் என்ற காரணத்திற்காக என் மனைவி மீதும், என் மகன் மீதும் பொய்யான பல குற்றச்சாட்டுக்களை என் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.